

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், எண்ணாயிரம் ஊராட்சியில் இருளர் குடியிருப்பை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாநில மகளிர் பிரச்சார குழு செயலாளர் தேன்மொழி, மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றிய குழு தலைவர் சங்கிதாஅரசி ரவிதுரை, ஒன்றியச் செயலாளர்கள் வேம்பி ரவி, ஜெய.ரவிதுரை, ஜெ.ஜெயபால், ஒன்றியக் குழு துணை தலைவர் ஜீவிதா ரவி, ஒன்றிய குழு உறுப்பினர் சத்யா கோபாலகிருஷ்ணன், ஊராட்சி மன்றத் தலைவர் வீரம்மாள் சண்முகாந்தம் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### நெல்லை மாவட்டம் - பாளையஞ்செட்டி குளம் - ரெட்டியார்பட்டியில்

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பப் பதிவு முகாம்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு! இரா. ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்பு!

நெல்லை, ஜூலை 31-

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடைபெற்ற கடன் உதவிகள் வழங்கும் நிகழ்வில் 643 பயனாளிகளுக்கு ரூபாய் 5028 கோடி மதிப்பிலான கடன் உதவிகளையும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் 32 பயனாளிகளுக்கு ரூபாய் 11.56 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் 10 மாற்றுத்திறனாளி களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களையும் நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

பின்னர் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து பொதுமக்களின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மகளிர்கள் தங்கள் சொந்த காலில் நிற்க வேண்டும் என்ற நோக்கில் மகளிர் சுய உதவி குழுவினை ஏற்படுத்தி பல்வேறு கடன் உதவிகளை வழங்கி தொடங்கி வைத்தார்கள்.தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவி குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் முதலமைச்சர் அவர்களும் பெண்கள் வாழ்வில் ஏற்றம் பெற வேண்டும் என்று உயரிய நோக்கில் நகைக்கடன் தள்ளுபடி,மகளிர் சுய உதவி குழு கடன் உதவிகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மகளிர் கட்டணமில்லா பேருந்து திட்டத்தின் கீழ் மகளிர்கள் நகரப் பேருந்துகளில் எத்தனை முறை வேண்டுமானாலும் இலவசமாக பயணம் மேற்கொண்டு வருவதால் அவர்களின் பணம் சேமிப்பதற்கு இத்திட்டம் ஊன்றுகோலாக அமைகிறது.

நெல்லை மாவட்டத்தில் மொத்தம் குடும்ப அட்டைதாரர்கள் 5,01,877 உள்ளார்கள் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் இதுவரை முதல் கட்டமாக கிராமப்புறங்களில் 528 நியாய விலை கடைகளில் 2,46, 277 குடும்ப அட்டைதாரர்களில் 2,16,025 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டதில் 760 முகாம்கள் மூலம் 1,49,353 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக நகர்புறத்தில் 312 நியாயவிலைக் கடைகளில் உள்ள 2,55,600 குடும்ப அட்டைதாரர்களுக்கு 18 2023முதல்விண்ணப்பங்கள் மற்றும் டோக்கன்கள் வழங்கப்பட உள்ளது.

மகளிர்கள் வாழ்வாதாரத்தில முன்னேற வேண்டும் என அவர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் தொழில் தொடங்குவதற்கான கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.அதன்படி இன்று நெல்லை மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் ரூபாய் 20 லட்சத்து மதிப்பில் 25 பயனாளிகளுக்கு உழவர் காசு கடன்களையும் ரூபாய் 13 லட்சம் மதிப்பில் 28 பயனாளிகளுக்கு மத்திய கால கறவை மாட்டுக் கடன்களையும், ரூபாய் 15.86 லட்சம் மதிப்பில் 19 பயனாளிகளுக்கு சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கான கடன்களையும் ரூ.11.20 லட்சம் மதிப்பில் 20 பயனாளிகளுக்கு ஆதிராவிடர் நலத்திட்டத்திற்கான கடன் உதவிகளையும் ரூபாய் 4.20 கோடி மதிப்பில் 35 குழுவினை சார்ந்த சுமார் 520 பயனாளிகளுக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன்களையும் ரூபாய் ஒரு லட்சம் மதிப்பில் ஒரு பயனாளிக்கு மகளிர் தொழில் முனைவோர் கடன் உதவிகளையும் ரூபாய் 5 லட்சம் மதிப்பில் 10 பயனாளிகளுக்கு சிறு வணிக கடன்களையும் ரூபாய் 25000 மதிப்பில் ஒரு பயனாளிக்கு மாற்றுத்திறனாளி கடன் உதவிகளையும், ரூபாய் 50,000 மதிப்பில் ஒரு பயனாளிக்கு கணவனால் கைவிடப்பட்ட கை பெண்கள் ஆதரவற்ற உதவிகள் கடன் உதவிகளையும் ரூபாய் 5 லட்சம் மதிப்பில் ஒரு பயனாளிக்கு சம்பளக் கடன் உதவியும் ரூபாய் 1 லட்சம் மதிப்பில் ஒரு பயனாளிக்கு முத்துரா கடன் உதவி என மொத்தம் 643 பயனாளிகளுக்கு ரூபாய் 5028 கோடி மதிப்பிலான கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 32 பயனாளிகளுக்கு 11.56 லட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், மூன்று சக்கர சைக்கிள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,10 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

### புதுக்கோட்டையில்

# 7வது ஆசிய விளையாட்டுப் கோப்பை!

## அமைச்சர் எஸ்.ரகுபதி காட்சிப்படுத்தி பேட்டி!

புதுக்கோட்டை, ஜூலை 31-

புதுக்கோட்டை முத்தமிழறிஞர் கலைஞர் மாவட்ட விளையாட்ட ரங்கில், *7th Hero Asian Champions Trophy, Pass the Ball Trophy Tour* நிகழ்ச்சியில் சட்ட அமைச்சர் எஸ். ரகுபதி கோப்பையினை காட்சிப்படுத்தினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

அது போது அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

சிறைத்துறையில் ஒரு முதல் வகுப்பு சிறைவாசிக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகிறதோ அது மட்டுமே செந்தில் பாலாஜிக்கு வழங்கப்படுகிறது. கூடுதலாக எந்த சலுகையும் வழங்க முடியாது.

கேண்டீனில் உணவு வாங்கிக் கொள்வதற்கு அனுமதி உண்டு... அதற்கு உண்டான தொகையாக ரூ.1000க்கு அனுமதிக்கப்படுகிறது. வெளியில் இருந்து எந்த உணவும் கொண்டு வர அனுமதி வழங்கப்படுவதில்லை. சிறையில் ஏசி வசதி செய்து கொடுக்க இயலாது. மற்ற சிறைவாசிகளுக்கு என்ன வசதி செய்து கொடுக்கப்படுகிறதோ அதே வசதி தான் செந்தில் பாலாஜிக்கும் செய்து கொடுக்கப்படுகிறது.

இந்த வழக்கு உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் போன்றவற்றில் இருப்பதால் அவருக்கு ஏதாவது இடைஞ்சல் செய்ய வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு ஊடகங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் இப்படி ஒரு தவறான தகவல்களை பரப்புவதன் மூலமாக அவர் ஏதோ சிறையில் ஒரு சொகுசு வாழ்க்கை வாழ்கிறார் என்கின்ற மாய தோற்றத்தை உருவாக்க பார்க்கிறார்கள். அப்படி சிறைத்துறை செய்வது எங்கேயும் கிடையாது. முதலமைச்சரும் அனுமதிக்க மாட்டார்.

இவ்வாறு அவர் கூறினார்.

மேலும் நீதிமன்றங்களில் அம்பேத்கர் போட்டோ வைக்க கூடாது என்ற பிரச்சினை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு, “இது தொடர்பாக நீதிமன்ற தலைமை நீதிபதியை சந்தித்து மனு அளித்தேன். அதற்கு எந்த புகைப்படத்தையும் எடுக்க சொல்லவில்லை. இருக்கக்கூடியது இருக்கட்டும் அப்படியே பராமரிக்க உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், அதில் எந்த வித மாற்றமும் செய்யப்படவில்லை” என நீதிபதி தெரிவித்ததாக கூறினார்.

ஆண்டுக்கு ஆண்டு விலைவாசி உயர்வு ஒரு குறிப்பிட்ட சதவீதம் உயர்வது இயல்பானது. ஆனால் தி.மு.க. ஆட்சியில் விலைவாசி உயர்வு கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் விலைவாசி ஏறாத அளவுக்கு கட்டுப்பாட்டில் வைத்துள்ளோம். ஆனால் சிலர் பதுக்கல் போன்ற விஷயங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். அதையெல்லாம் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு, விலை வாசிகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கொடநாடு விவகாரத் தில் உண்மை குற்றவாளிகள் விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் அவர்கள் எந்த உயர் பதவியில் இருந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தப்ப முடியாது அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்,

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் லஞ்ச ஒழிப்பு புகாரில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் நீதிமன்ற உத்தரவுப்படி யாரிடம் ஒப்படைக்க வேண்டுமோ அவர்களிடம் தான் ஒப்படைக்கப் பட்டுள்ளது, மூன்றாம் நபர்களிடம் ஒப்படைக்க முடியாது.

மேகதாது விவகாரத்தில் நீர்வளத்துறை அமைச்சர் சட்டபூர்வமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதனை எடுப்பார் என தெரிவித்தார்.



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.வின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருக்கோயிலின் அர்ச்சகர்கள் மற்றும் கோவில் பூசாரிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திருச்சி மாவட்டம். மணப்பாறையில் உள்ள தனியார் திருமண மஹாலில் மாவட்ட அவைத்தலைவர் கோவிந்தராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட கோவில் அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.


